**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S.No. 267/2021</u>**

**<u>நாள்.18.02.2026</u>**

**<u>வா.சா. 1</u>- டைட்டஸ் ஆதித்தன்**

**<u>1முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது வழக்குரையில் 10.12.1973 ல் 1வது பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லி உள்ளேன், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன் சாட்சி ஆவணங்களை பார்த்துவிட்டு, 1 வது ஆவணமாக தாக்கல் செய்திருப்பதாக சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 10.12.1973 தேதியிட்ட ஆவணமா என்றால் இது கிடையாது. நான் எனது வழக்குரையில் 10.12.1973 ல் 1வது பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எனக்கு அந்த ஆவணம் பற்றிய உண்மைத்தன்மை தெரியாது என்றால் சரியல்ல தெரியும். 1வது பிரதிவாதி எனது தாயார், 2 முதல் 6 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 6 தபசில் சொத்துக்கள் எனது தாயார் கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய ஆவணத்திற்கு உட்பட்டவை என்றால் சரிதான். 10.12.1973 ல் 1 வது பிரதிவாதி கிரையம் வாங்கியபோது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். 10.12.1973 ல் 1வது பிரதிவாதி எவ்வளவு விஸ்தீரண சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் 6 செண்ட். மேற்படி 6 செண்ட்டில் எவ்வளவு சொத்துக்கள் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் 1/2 செண்ட் வீதம் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டது பிரதிவாதி 5 க்கு 1 செண்ட், 6 வது பிரதிவாதிக்கு 1 செண்ட், மீதி இடங்கள், வீடு, வீட்டிற்கு முன்பாக உள்ள காலியிடம் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டது. 10.12.1973 ல் 1வது பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் தாயார் கிரையம் பெற்ற 6 செண்ட் சொத்தில் ஏதாவது 1 சதுர அடியாவது எனக்கு சொந்தமாக இருந்ததா என்றால் இல்லை.

இன்றைய தேதியிலும் தாயார் கிரையம் பெற்ற 6 செண்ட் சொத்தில் ஏதாவது 1 சதுர அடியாவது எனக்கு சொந்தமாக இருந்ததா என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகள் எனது தாயாரை ஏமாற்றி எழுதி வாங்கியதாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் பத்திரம் எழுதுவதற்கு சில காலம் முன்பாக எனக்கு தெரியவந்தது. 2 முதல் 6 பிரதிவாதிகள் எனது தாயாரை ஏமாற்றி எழுதி வாங்கப்போகிறார்கள் என்ற விபரம் தெரிந்து நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் பெரியவர்களை வைத்து பேசினேன். வழக்குரையில் எனது தாயார் 1வது பிரதிவாதி, 2 முதல் 6 பிரதிவாதிகள் ஏமாற்றி எழுதி வாங்கப்போகிறார்கள் என 1வது பிரதிவாதி என்னிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாயார் 1வது பிரதிவாதி யாரிடமும் அவரை நயவஞ்சகமாக சொத்துக்களை 2 முதல் 6 பிரதிவாதிகள் ஏமாற்றி எழுதி வாங்கப்போகிறார்கள் என சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளார். நான் இதே நீதிமன்றத்தில் என் தாயருக்கு எதிராக அ.வ.எண்.280/2021 என்ற வழக்கை எனது தாயார் டிவி, செய்தித்தாள் ஆகியவற்றில் அவதூறாக பேட்டி கொடுத்தார் என நஷ்டஈடு கேட்டு தாக்கல் செய்தேன் மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.280/2021 என்ற வழக்கில் 30.08.2021 அன்று எனது தாயார் என்னைப் பற்றி அவதூறாக பேசியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னால் ரத்து செய்யக்கோரிய வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 16.12.2020 ல் பதிவு செய்யப்பட்டவை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 16.12.2020 ல் பதிவு செய்யப்பட்டபிறகு, 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக 1வது பிரதிவாதி புகார் கொடுத்துள்ளாரா என்றால் வாய்மொழியாக சொல்லியுள்ளார் புகார் கொடுக்கவில்லை. வாய்மொழியாக சொல்லியது எந்த ஆண்டு, மாதம், தேதி என்றால் எனது உறவினரிடம் ஆவணம் பதியப்பட்டு சில நாட்களுக்குள்ளாக சொல்லிவிட்டார். என்னிடம் எந்த புகாரும் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக 1வது பிரதிவாதி தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் புகார் கொடுத்த உறவினர்கள் யார் என்றால் என் தாய்மாமா இருதயராஜ், உடன்பிறந்த தங்கை செல்வி, ஹெலன் பாப்பா.

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 16.12.2020 ல் பதிவு செய்யப்பட்டு 8 மாதங்கள் கழித்து வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1வது பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தை அவர் விரும்பும் நபர்களுக்கு கிரையம் கொடுக்கவோ, நன்கொடை கொடுக்கவோ உரிமை உண்டு என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருக்கும்வரை 1வது பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் உரிமை கொண்டாட யாருக்கும் உரிமை கிடையாது என்றால் சரிதான். 1வது பிரதிவாதி யாருடைய பராமரிப்பில் உள்ளார் என்றால் 2வது பிரதிவாதி மரியபுஷ்பலதா பராமரிப்பில் உள்ளார். எனக்கும் என் தாயருக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் என் தாயருக்கு எதிராக மொத்தம் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 வழக்குகள். 2021 காலகட்டத்தில் நான் என் தாயருக்கு எதிராகவும், என் தாயார் எனக்கு எதிராகவும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல எனக்கும் என் தாயாருக்கும் பிரச்சனை இல்லை உடன்பிறந்தவர்களுக்கு எதிராகத் தான் கவுண்டர் வழக்கு நிலுவையில் உள்ளது. என் தாயார் பெயரில் வழக்குச் சொத்து தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் ஆமாம். வேறு சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் இலவன்குளம் ரோடு சுமார் 3 செண்ட், கீழவயலியில் 2 மனைகள் தலா 2-3/4 செண்ட், ஆத்தியடி விநாயகர் கோவில் 26-3/4 செண்ட் காலிமனை. மேற்படி சொத்துக்கள் தற்போது என் தாயார் கைவசம் உள்ளதா என்றால் தற்போது எந்த இடமும் கைவசம் இல்லை. மேற்படி சொத்துக்களை என் தாயார் யாருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார். ஆத்தியடி விநாயகர் கோவில் 26-3/4 செண்ட் காலிமனை யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் 2004 ல் எனக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்டது. எனது தாயார் மேற்படி சொத்தை எனக்கு முழு மனதுடன் 2004 ல் நன்கொடையாக கொடுத்தாரா என்றால் ஆமாம். என் தாயார் என்ன படித்துள்ளார் என்ன வேலை பார்த்தார் என்றால் 5ம் வகுப்பு படித்துள்ளார் இல்லத்தரசியாக இருந்தார்.

தபசில் சொத்தில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை விறகுக்கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை 2004 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபிறகு குடும்ப நிர்வாகத்தை என் தாயார் பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் 6 பிள்ளைகளையும் பட்டப்படிப்பு படிக்க வைத்துள்ளார் என்றால் லாரன்ஸ் தவிர 5 பேரை பட்டப்படிப்பு படிக்க வைத்துள்ளார். 3 வது பிரதிவாதி சரோஜினி ராதா பிஸியோதெரபிஸ்டாக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்றால் சரியல்ல வழக்கறிஞர் படிப்பு படித்துள்ளார். என் தாயார் விவரமான நபர் அவரை யாரும் எளிதில் ஏமாற்ற முடியாது என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் நயவஞ்சகமாக பேசி 1 வது பிரதிவாதியை ஏமாற்றியுள்ளதாக சொல்லி உள்ளேன் அவ்வாறு நயவஞ்சகமாக என்ன பேசினார்கள் என எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இதுநாள்வரை வா.சா.ஆ.1 முதல் 6 பதிவு செய்யப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் மோசடியாக எழுதப்பட்டவை என அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல அனுப்பியுள்ளேன். மேற்படி அறிவிப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. நான் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை வழக்கிற்காக பொய்யாக அறிவிப்பு அனுப்பியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது ஒட்டுமொத்த குடும்பத்திற்கு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் எனது அப்பா பெயரில் சொத்துக்கள் உள்ளன.

**<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.18 18:47:03 +0530